# Winmeen - Group 4 VAO General Tamil Model Test 9

1. **பொருத்துக**

| **நூல்** | **நூற்றாண்டு** |
|---|---|
| 1. தொல்காப்பியம் | i) பொ. ஆ மு. 3 |
| 2. கவிராஜ மார்க்கம் | ii) பொ.ஆ. பி 9 |
| 3. பாரதம் | iii) பொ.ஆ.பி 11 . |
| 4. லீலா திலகம் | iv) பொ.ஆ.பி 15 |

A. i ii iii iv
B. ii iii iv i
C. iii ii i iv
D. iv iii ii i

2. 'நூறு' என்ற தமிழ்ச் சொல் கன்னடம், துளு ஆகிய மொழிகளில் முறையே எவ்வாறு அழைக்கப்படுகிறது
A. நூறு, நூரு B. நூரு, நூறு
C. நூறு, நூது D. நூரு, நூது

3. கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது ?
A. அருவி - மலை முகட்டுத் தேக்க நீர் குத்திட்டு குதிப்பது.
B. ஆழிக்கிணறு - கடலருகே தோண்டிக் கட்டிய கிணறு
C. குண்டு - தேக்கப்பட்ட பெரிய நீர்நிலை
D. ஆறு -பெருகி ஓடும் நதி

4. பகுபத உறுப்புகளாக பிரித்து எழுதுக – குமைந்தனை
A. குமைந்து + அனை B. குமை + த் + அனை
C. குமை + த் + அன் + ஐ D. குமை + த்(ந்) + த் + அன் + ஐ

5. சரியான பொருளைத் தேர்ந்தெடு.
குழீஇ,தோம்
A. பள்ளம், இசை B. ஒன்றுகூடி, இசை
C. ஒன்றுகூடி , குற்றம் D. பள்ளம், குற்றம்

6. கீழ்க்கண்டவற்றுள் எண் பேராயத்தில் இடம்பெறுவது எது?
A. சடங்கு செய்விப்போர் B. ஒற்றர்
C. யானை வீரர் D. அமைச்சர்

7. பொருத்துக

| | |
|---|---|
| 1. குறியீடுகளை மின்னாற்றல் மூலம் அச்சிடுவது | i) 1846 |
| 2. தொலைநகல் கருவி சேவை | ii) 1865 |
| 3. தொலைநகல் எடுக்கும் தொழில்நுட்பம் | iii) 1985 |
| 4. இணைய வணிகம் | iv) 1979 |
| 5. வையக விரிவு வலை வழங்கி | v) 1990 |

A. i ii iii iv v
B. ii iii i v iv
C. v ii i iv iii
D. iv iii v ii i

8. கீழ்க்கண்டவற்றுள் தவறான இணை எது?
   A. ஓரறிவு – உற்றறிதல்
   B. ஈரறிவு - உற்றறிதல் + நுகர்தல்
   C. மூவறிவு – உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல்
   D.ஐந்தறிவு - உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் + கேட்டல்
9. "கல்வி இல்லாத பெண்கள்
   களர்நிலம் அந்நி லத்தில்
   புல்விளைந் திடலாம் நல்ல
   புதல்வர்கள் விளைதல் இல்லை"
   என்னும் பாடல் குடும்ப விளக்கு நூலில் எத்தனையாவது பகுதியில் இடம்பெற்றுள்ளது ?
   A. 2 B. 3 C. 4 D. 5
10. நடுவணரசு அண்ணா நினைவாக அவர் உருவம் பொறிக்கப்பட்ட ஐந்து ரூபாய் நாணயத்தை வெளியிட்ட ஆண்டு
   A. 2008 B. 2009 C. 2010 D. 2011
11. கொற்கையில் ஆடவர்கள் முத்துக் குளிக்கவும், வலம்புரி சங்கு எடுக்கவும் கடலில் மூழ்கினர் என கூறும் அகநானூற்றின் பாடல்
   A. 300 வது பாடல் B. 530 வது பாடல்
   C. 350 வது பாடல் D. 325 வது பாடல்
12. ஒரெதுகை பெற்ற இரண்டு அடிகள் அளவொத்து வருவது _____ பாவகை ஆகும் .
   A. வெண்பா B. ஆசிரியப்பா
   C. சிந்து D. கலிப்பா
13. கல், உலோகம் , செங்கல் , மரம் முதலியவற்றைக் கொண்டு கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் உருவங்கள் அமைக்கும் கலை சிற்பக் கலை எனக் கூறும் நூல்
   A. அகராதி நிகண்டு B. சிந்தாமணி நிகண்டு
   C. சூடாமணி நிகண்டு D. திவாகர நிகண்டு
14. பொருத்துக .
   1. பல்லவர்கள் i) தாடிக்கொம்பு
   2. பாண்டியர்கள் ii) தாராசுரம்
   3. சோழர்கள் iii) பிள்ளையார்பட்டி
   4. நாயக்கர்கள் iv) மாமல்லபுரம்
   5. சமணர்கள் v) திருநாதர்குன்று

| | | | | | |
|---|---|---|---|---|---|
| A. | iv | iii | ii | i | v |
| B. | iii | iv | ii | i | v |
| C. | iii | iv | i | v | ii |
| D. | iv | ii | iii | i | v |

15. சரியான பொருளைத் தேர்ந்தெடு
   அடிசில், கொடியன்னார்
   A. எல்லை , ஆடவர் B. சோறு , ஆடவர்
   C. சோறு , மகளிர் D. எல்லை , சிறுமியர்
16. "காவல் உழவர் களத்து அகத்துப் போர்ஏறி
   நாவலோஓ என்றழைக்கும் நாளோதை – காவலன்தன்

கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தால் போலுமே
நல்யானைக்கோக்கிள்ளி நாடு "
இப்பாடலில் பயின்று வரும் அணி

A. உவமையணி B. எடுத்துக்காட்டுவமையணி
C. தற்குறிப்பேற்ற அணி D. பிறிது மொழிதல் அணி

17. 'மா முன் நிரை, விள முன் நேர்' வருவது _____தளை.
A. நேரொன்றாசிரியத்தளை
B. நிரையொன்றாசிரியத்தளை
C. வெண்சீர் வெண்டளை
D. இயற்சீர் வெண்டளை

18. தவறான இணையைத் தேர்ந்தெடு
A. பெரியாரின் சிந்தனைகள் - வே.ஆனைமுத்து
B. அஞ்சல் தலைகளின் கதை - எஸ்.பி. சட்டர்ஜி
C. தங்கைக்கு – பெரியார்
D. தம்பிக்கு – அண்ணா

19. இலக்கணக் குறிப்புத் தருக.
உருண்டது, போனது
A. ஒன்றன்பால் வினைமுற்றுகள்
B. பலவின்பால் வினைமுற்றுகள்
C. தன்மை பன்மை வினைமுற்றுகள்
D. முன்னிலை பன்மை வினைமுற்றுகள்

20. கல்யாணசுந்தரம் அவர்கள் _____ என்ற பெயரில் கதை இலக்கியத்தில் பங்களிப்பு செய்து வருகிறார்.
A. வாணிதாசன் B. கல்யாண்ஜி
C. வண்ணதாசன் D. கல்யாண்

21. உலக சிட்டுக்குருவிகள் தினமாக கொண்டாடப்படும் நாள்
A. மே 20 B. மார்ச் 20
C. செப்டம்பர் 20 D. அக்டோபர் 20

22. சரியான பொருளை தேர்ந்தெடு
ஆரளி, அளிஉலாம்
A. மொய்க்கின்ற வண்டு, வண்டு மொய்க்கின்ற
B. பாடும் வண்டு, வண்டின் சத்தம்
C. வண்டு மொய்க்கின்ற ,மொய்க்கின்ற வண்டு
D. வண்டின் சத்தம், பாடும் வண்டு

23. பொருத்துக.

| | |
|---|---|
| 1. இடங்கணி | i) முத்து |
| 2. தரளம் | ii) சங்கிலி |
| 3. மஞ்சை | iii) மயில் |
| 4. மண்டலம் | iv) மேகம் |
| 5. கொண்டல் | v) உலகம் |

A. 1 2 3 4 5
B. 2 1 4 3 5
C. 3 2 1 5 4
D. 2 1 3 5 4

24. சென்னிக்குளம் அண்ணாமையார் யாருடைய அரசவையில் அரசவைப் புலவராக இருந்தார்
A. பாரி
B. அருணகிரிநாதர்
C. இருதயாலய மருதப்பத் தேவர்
D. பேகன்

25. ஏதேனும் ஒரு பொருளைக் காட்சிப்படுத்திக் கவிதையினையும் அதற்குள்ளாக அமைத்து எழுதுவது
A. மதுரகவி B. சித்திரகவி
C. ஆசுகவி D. எதுவுமில்லை

26. திருக்குறளின் அறத்துப்பால் , பொருட்பால், இன்பத்துப்பாலில் உள்ள இயல்களின் எண்ணிக்கை முறையே
A. 38, 70, 25 B. 25, 70, 38
C. 4, 3, 2 D. 3, 2, 4

27. "ப்ரோக்காஸ் ஏரியா " என அழைக்கப்படும் மனித உடல் உறுப்பு
A. மூளையின் வலது பகுதி
B. மூளையின் இடது பகுதி
C. நியுரானின் வலது பகுதி
D. நியுரானின் இடது பகுதி

28. ரங்கராஜன் என்னும் இயற்பெயர் கொண்ட கவிஞர்
A. மீரா B. சுஜாதா
C. தமிழன்பன் D. கல்யாணசுந்தரனார்

29. நீலகேசி குறித்த கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது/ எவை
1. இந்நூல் நீலகேசி தெருட்டு எனவும் அழைக்கப்படுகிறது.
2. நீலகேசி என்னும் சமண சமயப் பெண் சமயத்தலைவர் பலரிடம் வாதம் செய்து புத்த நெறியை நிலை நாட்டுவதாக நூல் அமைந்துள்ளது.
3. இதில் கடவுள் வாழ்த்து பகுதி நீங்கலாக 11 பகுதிகளும் 894 பாடல்களும் உள்ளன.
4. இதன் ஆசிரியர் சமய திவாகர வாமன முனிவர்
A. அனைத்தும் சரி B. 1 , 3 சரி
C. 1 மட்டும் சரி D. 1 , 3, 4 சரி

30. 1794ல் தொடங்கப்பட்ட ஸ்கூல் ஆஃப் சர்வே என்ற நிறுவனம், எப்போது கிண்டி பொறியியல் கல்லூரியாக வளர்ச்சி அடைந்தது
A. 1826 B. 1835 C. 1859 D. 1857

31. "பொன் + சிலம்பு =பொற்சிலம்பு" இதில் வந்துள்ள புணர்ச்சி விதி
A. இனமிகல்
B. உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்
C. ணன வல்லினம் வர ட ற வும்
D. இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்

32. பகுபத உறுப்புகளாக பிரிக்க – விடுத்தல்
A. விடு+த் +த் + அல் B. விடு +த் + அல்

C. விடு+த் + தல் D. விடுத்து + அல்

33. புதுச்சேரியின் தலைமைப் பொறுப்பினை வகித்த கியோம் ஆந்த்ரே எபேர் என்பவரின் தரகராக நியமிக்கப்பட்டவர்

A.நைனியப்பர் B. திருவேங்கடம்

C. ஆனந்தரங்கர் D. பிரான்சுவா மர்த்தேன்

34. பொருத்துக

1. வதுவை i) அரசன்

2. கோன் ii) திருமணம்

3. மறுவிலா iii) தெள்ளிய நீரலை

4. தெண் டிரை iv) குற்றம் இல்லாத

5. விண்டு v) திறந்து

| | | | | | |
|---|---|---|---|---|---|
| A. | iv | iii | i | ii | v |
| B. | iii | v | ii | iv | i |
| C. | ii | i | iv | iii | v |
| D. | ii | i | v | iii | iv |

35. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து _____ நினை.

A. முகக்குறிப்பை அறிந்தவரை

B. எண்ணியதை எண்ணியவரை

C. மறதியால் கெட்டவர்களை

D. சொல்லேர் உழவரை

36. தவறான இணையை தேர்ந்தெடு

A. குறிஞ்சி - கூதிர் , முன் பனி

B. முல்லை - முன் பனி

C. மருதம் - ஆறு பெரும்பொழுது

D. பாலை - இளவேனில், முதுவேனில்

37. ஃப்ரெஸ்கோ என்பது எம்மொழிச் சொல் மற்றும் அதன் பொருள் என்ன?

A. ஆங்கிலம், புதுமை B. ஸ்பானிஷ், ஓவியம்

C. இத்தாலி, புதுமை D. ஸ்பானிஷ், புதுமை

38. தஞ்சை பெரிய கோவிலில் முதலாம் இராசாதிராசன் காலத்தில் ___ என்ற அதிகாரிச்சியை பற்றிய குறிப்பு இருக்கிறது.

A. எருதந் குஞ்சர மல்லி B. சோமயன் அமிர்தவல்லி

C. சோமவல்லி D. மேற்கண்ட யாருமில்லை

39. "ஆனந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான் பொருள்காண் சாழலோ "
- இவ்வரிகளை இயற்றியவர்.

A. ஞானசம்பந்தர் B. நாவுக்கரசம்

C. சுந்தரர் D. மாணிக்கவாசகர்

40. கீழ்க்கண்டவற்றுள் சுந்தர ராமசாமி அவர்கள் , மலையாளத்திலிருந்து தமிழில் மொழிப்பெயர்த்த புதினங்கள் எவை?

1.செம்மீன் 2. ஒரு புளியமரத்தின் கதை

3. குழந்தைகள் பெண்கள் ஆண்கள் 4. தோட்டியின் மகன்

A. அனைத்தும் B. 1, 2,4

C. 2, 3, 4 D. 1,4

41. சரியான பொருளைத் தேர்ந்தெடு.

மீட்சி, நவை

A. குற்றம், விடுதலை B. விடுதலை, தண்டனை

C. விடுதலை, குற்றம் D. விடுதலை, உலகம்

42. சரியான பொருளைத் தேர்ந்தெடு.

புரையோர், யாணர்

A. சான்றோர், அறிவாளி

B. சான்றோர், புதுவருவாய்

C. அறிவாளி, பனையோலை

D. அறிவாளி, பெட்டி

43. தமிழ் பேரகராதியின் படி 'சித்தி' என்ற சொல்லின் பொருள்களில் அல்லாதது எது?

A. மெய்யறிதல் B. வெற்றி

C. காரியம் கைகூடல் D. கடவுள்

44. "சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்" என்று பாடியவர் யார்?

A. திருமூலர் B. சிவவாக்கியர்

C. பாம்பாட்டிச் சித்தர் D. பத்திரகிரியார்

45. இலக்கணக் குறிப்புத் தருக .

வாழ்அயன், செய்புண்ணியம்

A. வினைத்தொகைகள் B. பண்புத்தொகைகள்

C. உரிச்சொல் தொடர்கள் D. வியங்கோள் வினைமுற்றுகள்

46. சரியான பொருளை தேர்ந்தெடு .

தோட்டி, ஆயம்

A. வாய்க்கால், விலங்கு B. தொட்டில், ஆடு

C. துறட்டி, ஆடு D. ஆடு, குதிரை

47. மனோன்மணீயம் பே. சுந்தரனார் அவர்கள் திருவனந்தபுரம் அரசுக் கல்லூரியில் ___பேராசிரியராகப் பணியாற்றினார்.

A. இலக்கணம் B. இலக்கியம்

C. தத்துவம் D. கணிதம்

48. "உயிர் வரின் உக்குறள் மெய்விட்டோடும் , உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே" என்னும் விதிகளின் படி புணர்ந்து வரும் சொல் எது?

A. பேரழகு B. காலத்தச்சன்

C. உழுதுழுது D. விடுத்து

49. கீழ்க்கண்டவைகளில் இராமநாதபுரத்தில் இல்லாத பறவைகள் சரணாலயம் எது?

A. கஞ்சிரங்குளம் B. கரைவெட்டி

C. சித்திரங்குடி D. மேல்செல்வனூர்

50. கீழ்க்கண்ட ஓலைச்சுவடிகள் பாதுகாக்கப்படும் இடங்களில் சரியானது எது?

1. கீழ்திசைச்சுவடிகள் நூலகம் – சென்னை

2. அரசு ஆவணக் காப்பகம் – தஞ்சாவூர்
3. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் – சென்னை
4. சரஸ்வதி நூலகம் – தஞ்சாவூர்

A. 1, 2, 4 சரி B. 1, 3, 4 சரி
C. 1, 2, 3 சரி D. 2, 3, 4 சரி

51. " வீழ்ந்து வெண்மழை தவழும் விண்ணுறு பெருவரை பெரும்பாம்பு உழ்ந்து தோலுரிப் பனபோல் ஒத்த மற்றவற் றருவி" என்ற பாடலின் ஆசிரியர் யார்?

A. திருத்தக்கதேவர் B. பாரதியார்
C. காளமேகப்புலவர் D. செயங்கொண்டார்

52. தவறான கூற்றைத் தேர்ந்தெடு

A. தமிழ்கெழு கூடல் – புறநானூறு
B. தமிழ்நிலை பெற்ற தாங்க மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை -சிறுபாணாற்றுப்படை
C. ஆலவாய் என்னும் பெயர் அமைந்துள்ளது - திருவிளையாடற் புராணம்
D. கல்வெட்டில் மதுரை என்ற பெயர் மருதை என்று பொறிக்கப்பட்டுள்ளது.

53. ஜி.யு.போப் அவர்கள் திருநெல்வேலி மாவட்டம் சாயர்புரத்தில் _____ ஆண்டு முதல் ______ ஆண்டு வரை கல்விப் பணியும் சமயப் பணியும் ஆற்றினார்.

A. 1842, 1850 B. 1843, 1850
C. 1842,1849 D. 1843,1849

54. "வான்உறு மதியம் வந்தென்(று) எண்ணி
மலர்க்கரம் குவியுமென்(று) அஞ்சி"
என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல்

A. நளவெண்பா B. விவேகசிந்தாமணி
C. சிலப்பதிகாரம் D. மணிமேகலை

55. "நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்" என்ற வரிகளை இயற்றியவர் யார்?

A. கம்பர் B. கபிலர்
C. நக்கீரனார் D. தேவகுலத்தார்

56. கொற்கை துறைமுகத்தில் முத்துக்குளித்தல் சிறப்பாக நடந்ததாக கூறும் வெளிநாட்டறிஞர் யார்?

A. யுவான் சுவாங் B. மார்க்கோபோலோ
C. கால்டுவெல் D. வீரமாமுனிவர்

57. "கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து "
இக்குறளில் பயின்று வரும் அணி

A. எடுத்துக்காட்டுவமையணி
B. உவமையணி
C. இல்பொருள் உவமையணி
D. பிறிது மொழிதல் அணி

58. 'தமிழ் இலக்கணம் படிக்க படிக்க விருப்பத்தை உண்டாக்குவது 'என்று கூறியவர் யார்?

A. கெல்லட் B. முனைவர் எமினோ
C. கமில்சுவலபில் D. பாவாணர்

59. பரிதிமாற்கலைஞர் , சூரிய நாராயண சாஸ்திரி என்ற வடமொழி பெயரை ______ நூலில் பரிதிமாற்கலைஞர் என மாற்றி சூட்டிக் கொண்டார்.

A. சித்திரக் கவி B. ஞானபோதினி

C. தமிழ் வியாசங்கள் D. தனிப்பாசுரத் தொகை

60. "நேற்று புயல் வீசியதால், பள்ளிக்கு விடுமுறை" இது எவ்வகை தொடர்?

A. தொடர்நிலைத் தொடர் B. தனிநிலைத்தொடர்

C. கலவைத் தொடர் D. செய்வினைத் தொடர்

61. சிவதாணு ,ஆதிலட்சுமி அம்மையார் ஆகியோரை பெற்றோராக கொண்ட கவிஞர் யார்?

A. திரு.வி.க B. கவிமணி

C. உவமைக் கவிஞர் D. நையாண்டி பாரதி

62. ஓரடியுள் உள்ள சொற்களை, அவை தரும் பொருளுக்கு ஏற்ப மாற்றி கூறுதல் ______பொருள்கோள் எனப்படும்.

A. கொண்டுகூட்டுப் பொருள்கோள்

B. நிரல்நிரைப் பொருள்கோள்

C. அடிமறிமாற்றுப் பொருள்கோள்

D. மொழிமாற்றுப் பொருள்கோள்

63. "கட்டற்று வானிலே தவழ்கின்ற காற்றினைக்
கைது செய்தாரு மில்லை
காலமாங் கிழவனை ஞாலமோ கடவுளோ
கடுஞ்சிறைவைத்ததில்லை" என்ற வரிகளை இயற்றியவர் யார்?

A. சிற்பி பாலசுப்பிரமணியம்

B. நா.காமராசன்

C. முடியரசன்

D. கண்ணதாசன்

64. நா.காமராசன் அவர்கள் இயற்றிய கறுப்பு மலர்கள் என்னும் தொகுப்பு நூல் எந்த ஆண்டு வெளிவந்தது?

A. 1970 B. 1971 C. 1972 D. 1973

65. தவறான இணையைத் தேர்ந்தெடு.

A. ஓய்வு - பேறறிஞர் அண்ணா

B. தமிழக மகளிர் - அ. காமாட்சி குமாரசாமி

C. கல்வியே அழியாச் செல்வம் – மறைமலையடிகள்

D. குடிமக்கள் காப்பியம் – தி.வை. சதாசிவப் பண்டாரத்தார்

66. சரியான இணையைத் தேர்ந்தெடு.

1. பழமலை – பழனி
2. ஐயாறப்பர் -பஞ்சநதீசுவரர்
3. பழமலைநாதர் – பழனி முருகன்
4. குடமூக்கு – கும்பகோணம்

A. 1, 3 சரி B. 2 , 4 சரி

C. 1, 2, 3 சரி D. அனைத்தும் சரி

67. தவறான இணையைத் தேர்ந்தெடு

A. புரோநோட் – நுழைவுச்சீட்டு

B. பாஸ்போர்ட் – கடவுச்சீட்டு

C. விசிட்டிங் கார்டு – காண்புச்சீட்டு

D. ரசீது – பற்றுச்சீட்டு

68. "முனிவரும் பார்ப்பாரும் ஆனிரையும் மழையும் முடியுடை வேந்தரும் உலகும்" என்று கூறியவர் யார்?

A. திருஞானசம்பந்தர் B. தொல்காப்பியர்

C. கம்பர் D. நச்சினார்க்கினியர்

69. கீழே காணப்பெறுவனவற்றுள் சரியான கூற்றுகள் எவை?

1. நிலையாமையைச் சொல்லும் காஞ்சித் திணையின் துறைகளில் ஒன்று, 'முதுமொழிக் காஞ்சி' இப்பெயரில் மதுரைக் கூடலூர் கிழார்இயற்றிய நூல், 'அறவுரைக்கோவை' என்றும் அழைக்கப்படுகிறது.

2. முதுமொழிக் காஞ்சியில், பதினொரு அதிகாரங்கள் உள்ளன

3. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துச் செய்யுட்கள் உள்ளன.

4. முதுமொழிக் காஞ்சியில் மொத்தம் நூற்றுப்பத்துச் செய்யுட்கள் உள்ளன. அவை நச்சினார்க்கினியர் முதலிய நல்லுரையாசிரியர்களால் மேற்கோளாகக் கையாளப்பட்டுள்ளன.

A. 1, 2 சரி B. 1, 4 சரி

C. 2, 3 சரி D. 3, 4 சரி

70. கீழ்க்கணும் திருக்குறளைத் தக்க மேற்கோள் தொடரால் நிரப்புக.

"ஊழிபெயரினும் தாம்பெயரார் ____ __________________ "

A. சால்பென்னும் திண்மை உண்டாகப் பெறின்

B. தோல்வி துவையல்லார் கண்ணும் கொளல்

C. பிறர் தீமை சொல்லா நலத்தது சால்பு

D. சான்றாண்மைக்கு ஆழி எனப்படு வார்

71. பொருத்துக.

| கவிதை நூல் | கவிஞர் |
|---|---|
| 1. புலரி | i) கலாப்ரியா |
| 2. சுயம்வரம் | ii) பசுவய்யா |
| 3. மின்னற் பொழுதே தூரம் | iii) கல்யாண்ஜி |
| 4. யாரோ ஒருவனுக்காக | iv) தேவதேவன் |

| | | | | |
|---|---|---|---|---|
| A. | 2 | 3 | 4 | 1 |
| B. | 3 | 4 | 1 | 2 |
| C. | 4 | 2 | 3 | 1 |
| D. | 3 | 1 | 4 | 2 |

72. கீழ்க்காணும் 'வல்லினம் மிகும் இடம்' குறித்த கூற்றில் பிழையான கூற்றைத் தேர்ந்தெடுக்க.

A. அந்த, இந்த, எந்த என்னும் சொற்களின் பின்வரும் வல்லினம் மிகும்.

B. ஓரெழுத்து ஒரு மொழியில் வரும் வல்லினம் மிகும்.

C. உம்மைத் தொகையில் வல்லினம் மிகும்

D. சால, தவ என்னும் உரிச்சொற்களின் பின்வரும் வல்லினம் மிகும்.

73. 'சேர்' என்னும் வேர்ச்சொல்லின் பெயரெச்சம்

A. சேர்ந்து B. சேர்க

C. சேர்ந்த D. சேர்ந்தது

74. பின்வருவனவற்றுள் பண்புப் பெயர் புணர்ச்சியைக் குறிக்காத விதி எது ?
A. தன்னொற்றிரட்டல்
B. அடியகரம் ஐயாதல்
C. மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்
D. இடையுகரம் இய்யாதல்

75. பொருந்தாத விடையைக் கண்டறிக
சுந்தர ராமசாமி எழுதிய நாவல்கள்
A. புளிய மரத்தின் கதை
B. பஞ்சும் பசியும்
C. ஜேஜே.சில குறிப்புகள்
D. குழந்தைகள் ஆண்கள் பெண்கள்

76. கீழ்க்காணும் நூல்களுள் இலக்கண நூல் அல்லாதது
A. தொல்காப்பியம்
B. தேம்பாவணி
C. தண்டியலங்காரம்
D. வீரசோழியம்

77. குமரகுருபரரின் நூல் பட்டியலில் பொருந்தாத நூல்
A. மதுரைக் கலம்பகம் B. நந்திக் கலம்பகம்
C. கந்தர் கலிவெண்பா D. நீதிநெறி விளக்கம்

78. கீழ்க்காண்பனவற்றுள் பொருத்தமற்றதைக் குறிப்பிடுக.
A. மதுரை சொக்கநாதநாயக்கர் மனைவி இராணி மங்கம்மாள்
B. இராணி மங்கம்மாளின் மகன் அரங்க கிருட்டின முத்து வீரப்பன் மனைவி இராணி முத்தம்மாள்
C. இராணி மங்கம்மாளின் பெயரன் விசயரங்கச் சொக்கநாதன்
D. பட்டினப்பாலை, பாண்டியனின் வீரச்செயல்களைப் போற்றிக்கூறும் தமிழ்ப் பனுவல்

79. அதியமான் நெடுமானஞ்சியின் அவைக்களப் புலவராகத் திகழ்ந்தவர்
A. வெள்ளி வீதியார் B. ஔவையார்
C. காக்கை பாடினியார் D. நக்கண்ணையார்

80. விடைக்கேற்ற வினா வைத் தேர்ந்தெடு
பரிதிமாற் கலைஞர் செம்மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளார்
A. பரிதிமாற் கலைஞர் என்ன செய்தார்?
B. பரிதிமாற் கலைஞர் எம்மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளார்
C. பரிதிமாற் கலைஞர் இலக்கணம் வகுத்தாரா?
D. பரிதிமாற் கலைஞரின் தொண்டு யாது?

81. கீழ்க்காண்பனவற்றுள் பொருந்தாச் சொல்லைக் கண்டறிக
A. வெட்சித் திணை B. வாகைத் திணை
C. முல்லைத் திணை D. வஞ்சித் திணை

82. வினைமுற்று, பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகிய இவற்றினைப் பயனிலையாகக் கொண்டு முடிவது?
A. நான்காம் வேற்றுமை B. இரண்டாம் வேற்றுமை
C. முதல் வேற்றுமை D. ஆறாம் வேற்றுமை

83. திருக்குறள் – பொருட்பாலின் இயல்கள்

A. பாயிரவியல், துறவறவியல், ஒழிபியல்

B. அரசியல், அங்கவியல், ஒழிபியல்

C. அரசியல், இல்லறவியல், களவியல்

D. பாயிரவியல், அங்கவியல், கற்பியல்

84. 'நாரதர் வருகிறார்' என்ற தொடர் என்ன ஆகுபெயர் ?

A. காரியவாகு பெயர் B. கருத்தாவாகு பெயர்

C. கருவியாகு பெயர் D. உவமையாகு பெயர்

85. கீழுள்ள பட்டியலில் பொருந்தாத நாடகம்

A. சந்திரோதயம் B. ஓர் இரவு

C. தூக்குமேடை D. வேலைக்காரி

86. மல்லார்மேவின் கவிதையை பிரெஞ்சு மொழியிலிருந்து தமிழில் மொழிப்பெயர்த்தவர் யார்?

A. வெங்கடாசலபதி B. ஸ்ரீராம்

C. ஜெயராமன் D. இந்திரன்

87. "உனக்கு பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பாடத்தான் வேண்டும்" என்று பாடியவர்

A. வில்வரத்தினம்

B. பெரியவன் கவிராயர்

C. இந்திரன்

D. அழகிய பெரியவன்

88. கவிஞர் இந்திரன் நடத்திய இதழ்கள் யாவை?

1. வெளிச்சம் 2. தமிழ்நிலம்

3. தென்றல் 4. நுண்கலை

A. 1, 4 B. 1, 2 C. 2, 4 D. 3, 4

89. பாயிரத்திற்கு உரிய பெயர்களில் பொருந்தாதது எது?

1. பதிகம் 2. அணிந்துரை

3. அகவுரை 4. நூன்முகம்

A. எதுவுமில்லை B. 1, 3 C. 3, 4 D. 3

90. " நாம நீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்

மேல் நின்று தான் சுரத்தலான்" என்று பாடியவர்

A. இளங்கோவடிகள் B. சீத்தலைச் சாத்தனார்

C. கம்பர் D. ஔவையார்

91. வலசையின் போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்களில் தவறானது எது?

A. தலையில் சிறகு வளர்தல்

B. உடலின் நிறம் மாறுதல்

C. இறகுகளின் நிறம் மாறுதல்

D. உடலில் கற்றையாக முடி வளர்தல்

92. ''தென்திசைக் குமரிஆடி வடதிசைக்கு ஏகுவீர் ஆயின்" என்ற அடிகள் இடம்பெறும் நூலை இயற்றியவர் யார்?

A. ஔவையார் B. சத்திமுத்தப்புலவர்

C. பாரதியார் D. பாரதிதாசன்

93. "தம்மை ஒத்த அலைநீளத்தில் சிந்திப்பவர் என்று மேதகு அப்துல் கலாம் அவர்களால் பாராட்டப் பெற்றவர் யார்?

A. மயில்சாமி அண்ணாதுரை

B. நெல்லை சு.முத்து

C. சிவன்

D. நெல்லை சு. முகிலன்

94. சொல்வகையை அறிந்து பொருந்தாச் சொல்லை தேர்ந்தெடு.

A. சென்ற B. வந்த

C. சித்திரை D. நடந்த

95. வ.உ.சி அவர்கள் ' சுதேசி நாவாய்ச் சங்கம்' என்ற கப்பல் நிறுவனத்தை பதிவு செய்த ஆண்டு

A. 1905 B. 1906 C. 1907 D. 1908

96. தவறான இணையைத் தேர்ந்தெடு

A. ஏவல் – தொண்டு

B. எய்தும் – கொடுக்கும்

C. அல்லாமல்- அதைத் தவிர

D. கூர் – மிகுதி

97. "உங்கள் சுயத்துடன் நீங்கள் ஒருமைப்பாடு கொண்டிருக்கும் போது நீங்கள் நல்லவர் " என்ற வரிகள் யாருடையது

A. காந்தி B. விவேகானந்தர்

C. கலீல் கிப்ரான் D.பெரியார்

98. கீழ்க்கண்டவற்றுள் இடுகுறிப்பெயர் எது?

A. பறவை B. மண்

C. முக்காலி D. மரங்கொத்தி

99. வணிகர்கள் பொருளை வாங்கும்போது உரிய அளவை விட அதிகமாக வாங்க மாட்டார்கள் என்றும் பிறர்க்குக் கொடுக்கும் போது அளவைக் குறைத்துக்கொடுக்க மாட்டார்கள் என்றும் வணிகரின் நேர்மையை பாராட்டும் நூல் எது?

A. திருக்குறள் B. குறுந்தொகை

C. பட்டினப்பாலை D. அகநானூறு

100.மொழியின் முதலிலும் இறுதியிலும் வரும் வினா எழுத்து எது?

A. ஆ B. யா C. ஓ D. ஏ

## Group 4 VAO General Tamil Model Test 9 – Answer Key

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | D | C | D | C | C | A | B | A | B |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| C | C | D | A | C | A | D | C | A | C |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| B | A | D | C | B | C | B | B | C | C |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| C | C | A | C | C | B | C | B | D | D |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| C | B | D | C | A | C | C | C | B | B |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| A | D | C | B | D | B | B | A | D | C |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| B | D | D | B | D | B | A | D | A | A |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| D | C | C | C | B | B | B | D | B | B |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| C | C | B | D | C | B | A | A | D | A |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 |
| B | B | B | C | B | B | C | B | C | D |